# Thozhil Nesan

தொழில் நேசன்

THOZHIL NESAN

May 2011

Page # 74


சென்னை, மேற்குத் தாம்பரத்தில் இயங்கி வரும் ஸ்ரீ சாய் ராம் பொறியியல் கல்லூரி, தமது 12 வது பட்டமளிப்பு விழாவினை கடந்த ஏப்ரல் 2011 அன்று தனது கல்லூரி வளாகத்தில் நடத்தியது. இதில் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி திரு. பி. ஜோதிமணி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்குப் பட்டங்களை வழங்கி பட்டமளிப்பு உரை நிகழ்த்தினார். இக்கல்லூரியின் நிறுவனர் மற்றும் தலைவர் திரு. லியோ முத்து இவ்விழாவிற்கு தலைமை தாங்கினார்.

கல்லூரி முதல்வர் முனைவர். சி.வி.ஜெயக்குமார் வரவேற்புரையாற்றினார். இயக்குநர் பேராசிரியர் வி.ஆர். இராஜமாணிக்கம் சிறப்புரையாற்றினார். செயலாளர் திரு. எம்.வாசு வாழ்த்துரை வழங்கினார். முதன்மை நிர்வாக அதிகாரி திரு. சாய் பிரகாஷ் லியோ முத்து நன்றியுரை ஆற்றினார்.

2009 - 10 ஆவது கல்வி ஆண்டில், மொத்தம் நான்கு மாணவர்கள் அண்ணா பல்கலைக்கழகத்திலேயே முதல் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கங்களைத் தட்டிச் சென்றனர். தமிழகத்திலேயே அதிக தங்கப் பதக்கங்களை வென்ற ஒரே பொறியியல் கல்லூரி என்ற பெருமையையும் இதன் மூலம் ஸ்ரீ சாய் ராம் தட்டிச்சென்றது.

தங்கப்பதக்கங்கள் வென்ற நான்கு மாணவர்கள் உள்பட 43 மாணவர்கள் பல்கலைக்கழக ரேங்குங்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. இவர்கள் அனைவருக்கும் தங்க



## நான்கு தங்கப் பதக்கங்களை வென்று,

# ஸ்ரீசாய்ராம் பொறியியல் கல்லூரி மாணவர்கள் சாதனை!

# Thozhil Nesan

தொழில் நேசன்
THOZHIL NESAN

May 2011
Page # 75

நாணயங்களும், பதக்கங்களும் வழங்கி கல்லூரி நிர்வாகம் கௌரவித்தது. தங்கப் பதக்கங்களை வென்றோரின் விவரம் பின்வருமாறு.



- செல்வி. ஜி. சங்கரலக்ஷ்மி - ஐ.சி.இ.
- திரு. ஜி. ராகவன் - மெக்கானிக்கல்
- திரு. எச். ராஜ்குமார் - எம்.பி.ஏ.
- செல்வி. எஸ். பிரேமலதா - எம்.இ.

சென்ற கல்வியாண்டில், இளநிலைப்பிரிவில் 449 மாணவர்களும், முதுநிலைப்பிரிவில் 134 மாணவர்களும் மொத்தம் 583 மாணவர்கள் பல்கலைக்கழகத் தேர்வுகளை எழுதினர். இதில் இளநிலைப்பிரிவில் 424 மாணவர்களும், முதுநிலைப்பிரிவில் 132 மாணவர்களும் மொத்தம் 556 மாணவர்கள் சிறந்த மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்று பட்டங்களைப் பெற்றனர்.

நடப்புக் கல்வியாண்டில் (2010-11) இறுதியாண்டு பயிலும் மாணவர்கள், டி.சி.எஸ்., எச்.சி.எல். ஐனாடிக்ஸ், டெக்மகேந்திரா, ஐஃபிளெக்ஸ், காக்னிசன்ட், இன்ஃபோசிஸ், பிரேக்ஸ் இந்தியா, குளோபல் அனலிட்டிக்ஸ், மகிந்திரா அண்ட் மகிந்திரா, டைட்டன், சைபெம் இந்தியா, ஃபோர்ட், செயின்ட் கோபைன், நாகார்ஜூனா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், எச்.டி.எஃப்சி. உள்ளிட்ட 52 நிறுவனங்களில் பணி வாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக (2009 - 10, 2010 -11) வேலை வாய்ப்புக்கு விண்ணப்பித்த இறுதியாண்டு மாணவர்களில் 95% மாணவர்கள், வளாக நேர்காணலில் தொடர்ந்து வேலைவாய்ப்பினைப் பெற்றுள்ளனர். இதே காலகட்டத்தில், ஆய்வுப் பணிக்காக ஏ.ஐ.சி.டி.இ. அமைப்பு இக்கல்லூரிக்கு மொத்தம் ரூ.1 கோடியை உதவித் தொகையாகவும் வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

**ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரி பற்றி....**

ஸ்ரீ சாய் ராம் பொறியியல் கல்லூரியானது 1995 ஆம் ஆண்டு சப்தகிரி கல்வி அறக்கட்டளையின் தலைவர் திரு. லியோ முத்துவால் தொடங்கப்பட்டது.

இக்கல்லூரியில், எந்திரவியல், கணினி அறிவியல், தகவல் தொழில்நுட்பம், மின்சாரம் மற்றும் தொடர்பியல், மின்னியல் மற்றும் மின்னணுவியல், கருவியியல் மற்றும் கட்டுப்பாட்டுப் பொறியியல், மின்னணுவியல் மற்றும் கருவியியல், சிவில் ஆகிய 8 இளநிலைப் பொறியியல் பிரிவுகளும், கணினி மற்றும் தொடர்புப் பொறியியல், தகவல் அமைப்பு, கேட் - கேம் ஆகிய 3 முதுநிலைப் பிரிவுகளும் கற்றுத் தரப்படுகின்றன.

எம்.பி.ஏ. மற்றும் எம்.சி.ஏ. படிப்புகளைக் கற்றுத்தரும் பொருட்டு, 1997 ஆம் ஆண்டு ஸ்ரீ சாய் ராம் இன்ஸ்டிட்டியூட் ஆஃப் மேனேஜ்மெண்ட் & கம்ப்யூட்டர் அப்ளிகேஷன்ஸ் என்ற கல்வி நிறுவனத்தையும் இவ்வறக்கட்டளை தொடங்கியது.

2006ம் ஆண்டு, கல்வியில் சிறந்து விளங்கியமைக்காக இப்பொறியியல் கல்லூரி குருகுல்ஜோதி என்ற விருதினைப் பெற்றது. அகில இந்திய அளவில் இந்த விருதினைப் பெற்ற 5 சிறந்த பொறியியல் கல்லூரிகளுள் இதுவும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

**ஊடகத்தொடர்பு**

முனைவர். கே. மாரன், பேராசிரியர் & இயக்குனர், ஸ்ரீ சாய்ராம் இன்ஸ்டிட்டியூட் ஆஃப் மேனேஜ்மெண்ட் ஸ்டடீஸ்@94441 89471.
திரு. சதீஷ்குமார், ஒருங்கிணைப்பாளர், ஸ்ரீசாய் ராம் கல்விக் குழுமம்@ 98400 65530.

- லஷ்மி தேவி